உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩௩.] யுவ௵ தை௴ [பகுதி-௩.
Vol. XXXIII. *January-February 1936.* No. 3.

நியாயப்பிரவேச மணிமேகலை.

[௩௮-ஆம் பக்கத் தொடர்ச்சி.]

(6) விருத்தாவ்யபிசாரி.

[ஆறாவது அநைகாந்திகத்தின்பெயர் நியாயப்பிரவேசத்தில் விருத்தாவ்யபிசாரி என்றும், மணிமேகலையில் விருத்தவியபிசாரி என்றும் மாறுபாடாக வழங்கப்படுகிறது.

துஷ்டஹேதுவான அநைகாந்திகத்துள் ஒன்றான இதற்குத் தோஷவாசகமான வியபிசாரசப்தத்தைக்கொண்டு விருத்தவியபிசாரி என்று மணிமேகலையாசிரியர் பெயரிட்டிருக்கிறார்; அதற்கு மாறாகவே குணவாசகமான அவ்வியபிசாரசப்தத்தைக்கொண்டு நியாயப்பிரவேசநூலாசிரியர் விருத்தாவ்யபிசாரி என்று பெயரிட்டிருக்கிறார்.

இது விருத்தஹேதுவைவிட்டுப்பிரியாததாதலால் இப்பெயர் பெற்றது என்று நியாயப்பிரவேசவிருத்தியுரைகாரர் பெயர்ப்பொருள்விளக்கியிருக்கிறார்; இதனை மணிமேகலையாசிரியர் பின்பற்றவில்லை.

சேரக்கூடாத விருத்தவேதுவுடன் சேர்ந்திருப்பதும் எதுவுக்கு வியபிசாரம் என்பது மணிமேகலையாசிரியர் துணிபென்று தோன்றுகிறது.

இவ் வநைகாந்திகவேதுப்போலிகளுக்கெல்லாம் பொதுப்பெயராக நியாயநூல்களில் சவ்வியபிசாரம் (வியபிசாரத்துடன் கூடியது)

என்று வியபிசாரசப்தம்கொண்டே பெயர் வழங்கப்பட்டுவருகிறது. அவ்வழக்கைப்பின்பற்றி மணிமேகலைநூலாசிரியரும் விருத்தவியபிசாரி என்று பெயரிட்டிருக்கலாமென்று தோன்றுகிறது. அநிஷ்டமான ஏதுதோஷத்தைத் தோஷவாசகமான வியபிசாரசப்தத்தாற்கூறுவதே பொருத்தமாயுள்ளது.

அன்றியும், வாதி பிரதிவாதிகளிருவரும் ஒருவரையொருவர் மறுத்துக்கூறுங்கூற்றாகக் காட்டப்படும் இதன் உதாரணத்துள்ள அவ்விரண்டேதுக்களும் கூடியே விருத்தாவ்யபிசாரியென்னும் ஓரேதுப்போலியாம் என்று நியாயப்பிரவேசநூல் கூறுகிறது.

மணிமேகலைநூல் அவ்வாறுகூறாது மற்றுள்ள அநைகாந்திக ஏதுப்போலிகளைப்போலவே வாதிகூறும் ஏது வொன்றே விருத்தவியபிசாரியாம் என்பதுதோன்ற இலக்கணங்கூறி உதாரணங்காட்டிச்செல்கிறது.

இன்னோரன்ன கொள்கைவேறுபாடுகள் இவ்விருநூலுக்கும் உண்டென்பதும் இவ்வேதுப்போலிநிரூபணத்தால் விளங்கும்.]

நியாயப்பிரவேசத்தில் இவ்வேதுப்போலிநிரூபணம் வருமாறு:—

𑌵𑌿𑌰𑍁𑌦𑍍𑌧𑌾𑌵𑍍𑌯𑌭𑌿𑌚𑌾𑌰𑍀 𑌯𑌥𑌾 ?
𑌅𑌨𑌿𑌤𑍍𑌯𑌃 𑌶𑌬𑍍𑌦𑌃, 𑌕𑍃𑌤𑌕𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌘𑌟𑌵𑌤𑍍 ।
𑌨𑌿𑌤𑍍𑌯𑌃 𑌶𑌬𑍍𑌦𑌃, 𑌶𑍍𑌰𑌾𑌵𑌣𑌤𑍍𑌵𑌾𑌤𑍍, 𑌶𑌬𑍍𑌦𑌤𑍍𑌵𑌵𑌦𑌿𑌤𑌿 ।
𑌉𑌭𑌯𑍋𑌃, 𑌸𑌂𑌶𑌯𑌹𑍇𑌤𑍁𑌤𑍍𑌵𑌾𑌤𑍍 𑌦𑍍𑌵𑌾𑌵𑌪𑍍𑌯𑍇𑌤𑍌
𑌏𑌕𑍋𑌽𑌨𑍈𑌕𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌃 𑌸𑌮𑍁𑌦𑌿𑌤𑌾𑌵𑍇𑌵 ॥

இதன்பொருள். 'விருத்தாவ்யபிசாரியாவது:

(1) "சத்தம் அநித்தம், செய்யப்படுதலால்; குடம்போலும்"

(2) "சத்தம் நித்தம், செவிப்புலனாதலால்; சத்தத்தன்மைபோலும்"

(என்னும்) இவ்விரண்டேதுக்களுக்கும் சமுசயவேதுத்தன்மையுண்மையால் இவ்விரண்டேதுக்களும் கூடியே ஓரநைகாந்திக வேதுப்போலியாம்' என்றவாறு.

இங்கு இவ்வேதுப்போலியின் இலக்கணம் சொல்லப்படவில்லை. உதாரணம்மட்டும் காட்டித் தம் துணிபு கூறப்பட்டிருக்கிறது.

இதனுள் விருத்தாவ்யபிசாரி என்றது பெயர். (1) 'சத்தம் அநித்தம், செய்யப்படுதலால்; குடம்போலும்', (2) 'சத்தம் நித்தம், செவிப்புலனாதலால்; சத்தத்தன்மைபோலும்' என்றது உதாரணம்.

இவ்வுதாரணத்துள் எதிரியாற்கூறத்தக்க மறுதலைப்பொருள் துணியும்விருத்தவேது முதலிற்சொல்லப்பட்டிருக்கிறது; வாதியாற் கூறத்தக்க துணிபொருள்சாதிக்கும் ஏது இரண்டாவதாகக் கூறப் பட்டிருக்கிறது; இது தருக்கநூல்களின் உதாரணத்தோடு மாறுபட்டது.

'இவ்விரண்டேதுக்களுங்கூடியே ஓரநைகாந்திகமாம்' என்றது தம் துணிபு கூறியவாறு.

'இவ்விரண்டேதுக்களுக்கும் சமுசயவேதுத்தன்மையுண்மையால்' என்றது தம்துணிபுநாட்டற்கு ஏதுவசனம் காட்டியவாறு.

இங்கு 'இரண்டேதுக்களுக்கும்' என்றது இரண்டேதுக்களும் கூடிய கூட்டத்துக்கு' என்றவாறு.

இதனால், 'அவ்வேதுக்களுள் ஒவ்வொன்றும் தனித்தனி சமுசயவேதுவாகமாட்டாது' என்பதே இந்நூலாசிரியர் கொள்கையாயிற்று. அஃதாமாறு:—

முன்னது, 'சத்தம் அநித்தம், செய்யப்படுதலால்; யாது யாது செய்யப்படுவது அது அது அநித்தம், குடம்போலும்' என்பதனால் 'சத்தம் அநித்தம்' என்பதிற் சமுசயம் உண்டாகமாட்டாது, தெளிவே யுண்டாகுமாதலால், இது நல்லேதுவாயுள்ளதே;

பின்னது, 'சத்தம் நித்தம், செவிப்புலனாதலால்; யாது யாது செவிப்புலனாவதோ அது அது நித்தம், சத்தத்தன்மைபோலும்' என்பதனாலும் 'சத்தம் நித்தம்' என்பதிலும் சமுசயம் உண்டாகமாட்டாது. இதுவும் நல்லேதுவாயுள்ளதே;

ஆதலால் இவற்றுள் ஏதேனும் ஒன்றைமட்டும் அநைகாந்திகம் என்று சொல்லலொண்ணாது; இவ்விரண்டேதுக்களும் ஒன்றாய்க்

கூடியே ஒரு சமுசயவேதுவாய் அநைகாந்திகமாகும் என்றவா ருயிற்று;

இவ்விரண்டேதுக்களும் கூடியே ஒரு சமுசயவேதுவாமாறு எங்ஙனமெனில்,— 'சத்தம்' என்னும் ஒரே பக்கப்பொருளில் 'செய்யப்படுதல்' என்னும் ஏதுவால் அநித்தத்தன்மையும், 'செவிப்புலனாதல்' என்னும்ஏதுவால்நித்தத்தன்மையும்தோன்றுதலால் அவை ஒருநிலைக்களத்திராத மாறுபட்டதன்மைகளாதலால், 'சத்தம்' என்னும் அப்பக்கப்பொருள் அவ்விரண்டுதன்மைகளையும் ஒருங்குடையதாகமாட்டாது; அவற்றுள் ஏதேனும் ஒன்றையே யுடையதாதல்வேண்டும். அவ்வொன்றுதான் அநித்தத்தன்மையோ? அல்லது நித்தத்தன்மையோ? என்ற சமுசயத்தை அவ்விரண்டேதுவும்கூடியேயுண்டாக்குதலால் அவ்விரண்டன்கூட்டமே இவ்வேதுப்போலியாம் என்பது நியாயப்பிரவேசநூலுடையார்கொள்கை; இது நியாயநூல்வழக்கொடு மாறுபட்டது.

மேலும், நியாயப்பிரவேசவிருத்தியில் இதன் பெயர்ப்பொருள் விளக்குமிடத்து,—

"விருத்தம் நவ்யபிசரதீதி விருத்தாவ்யபிசாரீ"

என்று எழுதப்பட்டிருக்கிறது.

இதன்பொருள், 'விருத்தவேதுவை விட்டுப் பிரியாது உடனிருக்கும் ஏது விருத்தாவ்யபிசாரியெனப் பெயர்பெறும்' என்பதே.

எடுத்துக்கொண்ட வுதாரணத்துள் இவ்விலக்கணம் பொருந்தவில்லை. எங்ஙனமெனில், செவிப்புலனாதல் என்னும் ஏது அதன் விருத்தவேதுவாகிய செயற்கையாற்றோன்றலைவிட்டுவிலகிச் சத்தத்தன்மையினும் உண்மையால் வியபிசாரமுடையதாயிற்று.

அவ்வாறே செயற்கையாற்றோன்றல் என்னும் ஏதுவும் செவிப்புலனாதலைவிட்டுவிலகிக் குடமுதலியவற்றினும் உண்மையால் வியபிசாரமுடையதாயிற்று.

ஆகவே விருத்தவேதுவைவிட்டுவிலகாதிருப்பதே விருத்தாவ்யபிசாரியென்று விருத்தியுரை கூறியதும் பொருத்தமில்லை.

இவ்வாராய்ச்சியை நியாயப்பிரவேசவிருத்தியுரைகாரர் விரித்துரைத்தும் அமையாமல் மேலும் பேசவேண்டியவிஷயம் பலவுண்டென்று சொல்லிச்செல்லுகின்றார்.

அது, இக்கொள்கை நியாயநூல்வழக்கொடு மாறுபட்டிருப்பது கொண்டு இதனை நிலைநாட்டக்கருதியிருப்பதுபோற் றோன்றுகிறது.

மணிமேகலையாசிரியர்க்கு இக்கொள்கை உடன்பாடன்றென்றே கொள்ளத்தக்கது.

அன்றியும், நியாயநூல்களில் இவ்வேதுப்போலியை 'சற்பிரதிபக்ஷம்' என்னும் பெயரால் வழங்குகின்றனர்; அதன்பொருள், 'சத்தாகிய நல்லேது பிரதிபக்ஷமாய் விரோதித்திருக்குமாறுகூறும் பிறிதோரேது' என்பதாம்.

இதனால் அவ்விரண்டேதுக்களுள் எதிரிகூறும் பிரதிபக்ஷஏது நல்லேது வென்றும், வாதிகூறும் ஸ்வபக்ஷஏதுவொன்றே ஏதுப்போலியாம் என்றும் கொள்ளப்பட்டுள்ளன.

அன்றியும், ஏதுப்போலியாராய்ச்சி, வாதிகூறும் ஏதுவிலுள்ள குற்றங்களை நிரூபித்தற்கு எதிரிகூறும் பிரதிபக்ஷஏது நிமித்தமாயிருப்பதல்லது அதுதானும் குற்றமுள்ளதெனக் காட்டுவதன்று.

இக்கொள்கையைத் தழுவியே மணிமேகலையில் இவ்வேதுப்போலிநிரூபணம் எழுதப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது.

மணிமேகலையில் இவ்வேதுப்போலிநிரூபணம் வருமாறு:—

'விருத்த வியபிசாரி திருந்தா வேதுவாய்
விருத்த வேதுவிற் கும்மிடங் கொடுத்தல்
சத்த மநித்தஞ் செயலிடைத் தோன்றலி
ஞெத்த தெனினச் செயலிடைத் தோன்றற்குச்
சபக்கமா யுள்ள கடாதி நிற்கச்
சத்த நித்தங் கேட்கப் படுதலிற்
சத்தத் துவம்போ லெனச்சாற் றிடுதல்
இரண்டினுஞ் சங்கயமா யேகாந்த மல்ல' (உசு அ-உஎடு)

இதனுள், 'விருத்தவியபிசாரி' என்றது பெயர். 'திருந்தாவேதுவாய் விருத்தவேதுவிற்கும் இடங்கொடுத்தல்' என்றது இலக்கணம். [இவ்விலக்கணம் நியாயப்பிரவேசத்தில் இல்லை.]

'திருந்தாவேது' என்றது விருத்த ஏதுவிற்குத் தன்னிலைக் களத்தைக்கொடுத்து அதனுடனுறைதலால் விருத்தவியபிசாரி யாய் ஏதுப்போலியாதற்குரிய வாதிகூறிய ஏதுவை. அது, 'சத் தம் நித்தம், செவிப்புலனுதலால்' என்பது.

இவ்வேதுவுக்குத் திருந்தாமையாவது:—ஏதுவிலக்கணமெல் லாம் பொருந்தியிருந்தும் அது, தன்றுணிபொருளைப் பலவே றிடங்களிலும் துணிந்து பயிற்சிபெறு திருத்தல்.

இங்கெடுத்துக்காட்டியவுதாரணத்துள்ள ஏது இரண்டனுள், வாதிகூற்றுகப் பின்னதாகக் காட்டிய 'சத்தம் நித்தம், கேட்கப்படு தலின்;' என்பதனுள், சத்தம் பக்கப்பொருள்; நித்தமாதல் துணி பொருள்; கேட்கப்படுதல் (செவிப்புலனுதல்) ஏதுப்பொருள்; அது, சத்தமாகிய பக்கப்பொருளிலும், நித்தப்பொருளாய்ச் சபக்கமாகிய சத்தத்தன்மையிலும் உள்ளதாகியும், அநித்தப்பொருள்களாய் விபக்கமாயுள்ள குடமுதலியவற்றுள் இல்லதாகியும் இருத்தலால் ஏது விலக்கணங்கள் அமைந்ததே. ஆயினும், அது, சத்தமொழிந்த பிறிதோரிடத்திலும் நித்தத்தன்மையைத் துணிந்து பயிற்சிபெறு மையே திருந்தாமையெனப்பட்டது.

இதனைத் திருந்தாவேது என்றதனுனே இதற்கு மறுதலையேது வான எதிரிக்குரிய விருத்தவேது திருந்திய ஏதுவென்பது பெறப் பட்டது.

'விருத்தவேதுவிற்கும் இடங்கொடுத்தல்' என்றது, தன் னிலைக்களத்தைத் தனக்கே உரியதாக்கிக்கொள்ளாமல், தன் துணி பொருளின்மறுதலைப்பொருள்துணியவல்ல விருத்தவேதுவிற்கும் உரியதாமாறு கொடுத்து, அதனல் பிரதிபக்ஷத்தன்மையெய்தி நிற்கும் அவ்விடத்தே தானும் வியபிசரித்துறைதல் என்றபடி.

இவ்வாறுள்ள இலக்கணம் இத்திருந்தாவேதுவுக்கே உரிய தென்பதும், திருந்திய விருத்தவேதுவுக்கு அன்றென்பதும் 'திருந்தாவேதுவாய்......இடங்கொடுத்தல்' என்ற வினையெச்சமுடி பானும் அறியத்தகும்.

ஏதுவுக்குத் திருந்துதலாவது:—தன் துணிபொருளைப் பல விடங்களிற்சாதித்துப் பயிற்சிபெற்றிருத்தல்.

இங்கெடுத்துக்காட்டிய ஏதுவிரண்டனுள், திருந்திய விருத்த ஏதுவசனம்,— 'சத்தம் அநித்தம், செயலிடைத்தோன்றலால்' என்பது.

இதனுள், சத்தம் பக்கம். அநித்தமாதல்: துணிபொருள். செயலிடைத்தோன்றல்: ஏதுப்பொருள்.

இச்செயலிடைத்தோன்றல் என்னும் ஏதுப்பொருளானது சத்தத்தின்கண்ணே அநித்தமாதலைத்துணிதலோடமையாது, குடம் படம் முதலிய செயலிடைத்தோன்றிய பலவற்றின்கண்ணும் அநித்தத்தன்மையாகிய தன்துணிபொருளைச் சாதித்துப் பயிற்சி பெற்றிருத்தலால் இது திருந்திய ஏதுவாயிற்று. அஃதெங்ஙனமெனில், 'குடம் அநித்தம், செயலிடைத்தோன்றலால்; யாதுயாது செயலிடைத்தோன்றுவது, அது அது அநித்தம்; படம்போலும்' எனவும், 'படம் அநித்தம், செயலிடைத்தோன்றலால்; குடம் போலும்' எனவும் வருவனவற்றான் உணர்க.

இவ்வேதுப்போலியுதாரணவேதுக்களுள் ஒன்று திருந்தியஏதுவும் பிறிதொன்று திருந்தாத ஏதுவுமாய் மாறுபட்டுநின்றவழித் திருந்திய ஏது வலியுடையதாதலால் அது ஏதுப்போலியாகாது நல்லேதுவேயாம் என்பதும், திருந்தாத ஏது வலியின்மையால் அதுவே ஏதுப்போலியாகுமென்பதும்போதரத் 'திருந்தாவேதுவாய்' என்று வேறுபாடு காட்டி, 'விருத்தஏதுவுக்கும் இடங்கொடுத்தல்' என்னும் ஏதுப்போலியிலக்கணம் அத்திருந்தாதஏதுவின்மேலதாமாறு கூறப்பட்டிருக்கிறது.

'சத்தமநித்தம், செயலிடைத்தோன்றலின் ஒத்தது' என்றது, இவ்வேதுப்போலியை உதாரணங்காட்டி விளக்குதற்கு இன்றியமையாத பிரதிபக்ஷவுதாகரணம் காட்டியவாறு.

இதனுள், சத்தம்: பக்கம்; அநித்தமாதல்: துணிபொருள். செயலிடைத்தோன்றலின் (ஒத்தது) என்றது ஏதுவசனம். [இது, 'யாதுயாது செயலிடைத்தோன்றுவது, அது அது அநித்தமாயுள்ளது; குடம் போலும்; சத்தமும் அங்ஙனம் அநித்தமாயுள்ளது'

எனத் தன்துணிபொருளைச் சத்தத்தின்கட்சாதிக்கும் ஆற்றலுடைமையால் (எல்லோர்க்கும் இஃதொத்ததாயிற்று.) என்றவாறு.] இதனால் பிரதிபக்ஷ ஏது நல்லேதுவாயுள்ளது என்பது பெறப்பட்டது.

'எனின்' என்றது 'என்று எதிரி சொல்வானாயின்' என்றவாறு.

'அச்செயலிடைத்தோன்றற்குச் சபக்கமாயுள்ள கடாதிநிற்க' என்றது, அங்ஙனம் எதிரிகூறுதற்குரிய பிரதிபக்ஷவேதுவிற்கு அநுகூலமாக அநித்தத்தன்மைக்குச் சபக்கமாயுள்ள குடமுதலிய காரியப்பொருள்கள் வேறாயிருக்கச்செய்தே என்றவாறு.

இதனால் பிரதிபக்ஷஹேதுவின் வலிமைகூறி எடுத்துக்கொண்ட ஏதுப்போலிநிகழ்தற்குரிய சந்தர்ப்பங் காட்டப்பட்டது.

'சத்தம் நித்தம், செவிப்புலனாதலால்; சத்தத்துவம்போல். எனச் சாற்றிடுதல்' என்றது, எடுத்துக்கொண்ட ஏதுப்போலிக்கு உதாரணங்காட்டியவாறு.

இதனுள், சத்தம்: பக்கம். நித்தமாதல்: துணிபொருள். செவிப்புலனாதலால் என்றது ஏதுவசனம். சத்தத்துவம்போல் என்றது திருஷ்டாந்தவசனம்.

இவ்வநுமானம், 'சத்தம் நித்தம், செவிப்புலனாதலால்; யாது யாது செவிப்புலனாவது அது அது நித்தமாயுள்ளது சத்தத்துவம் போலும்' எனத் துணிபொருள்சாதிப்பது.

'கடாதிநிற்கச் சாற்றிடுதல்' என இயையும். 'சாற்றிடுதல்' விருத்தவியபிசாரியென்னும் ஏதுப்போலிக்கு உதாரணமாம் என்க.

'கடாதிநிற்க' எனப் பிரிக்கப்பட்டமையால், 'சத்தம் அநித்தம், செயலிடைத்தோன்றலால்' என்று முன்னதாகக்காட்டிய 'செயலிடைத்தோன்றல்' என்னும் ஏது, விருத்தவியபிசாரியாகமாட்டாதென்பதும், அது, 'செவிப்புலனாதலால்' எனப் பின்னின்ற ஏதுவை விருத்தவியபிசாரியாக்குதற்கு நிமித்தமாத்திரமாய் நிற்பது என்பதும் பெறப்பட்டன.

'இரண்டினுஞ் சங்கயமாய்' என்றது, முன்னும் பின்னுமாகச் சொல்லப்பட்ட (1) பரபக்ஷ (2) ஸ்வபக்ஷஹேதுக்களிரண்டாலும் துணிபொருளில் சந்தேகமுண்டாதலால் என்றவாறு.

இதனால் ஒவ்வொன்றும் தன் துணிபொருளைச் சந்தேகமின்றித் தெளிதற்குரியதேயாம் என்பது பெறப்பட்டது.

பெறவே பின்னின்ற திருந்தாத ஏது முன்னின்ற திருந்திய ஏதுவின் மாறுபாட்டால் சங்கயமெய்தி அனைகாந்திகமாயிற்று என்பது போதரும்.

'சாற்றிடுதல் ஏகாந்தமல்ல' என இயையும். சாற்றிடுதல் ஏகாந்தமன்று என்றவாறு. இது, ஒருமையிற் பன்மை மயங்கி வந்த வழுவமைதி.

இவ்வாறே இப்பாட்டினுள் 'இலகுமதி சந்திரனல்ல வென்றல்' என்று பிறண்டும் மயங்கிவந்தமை காண்க.

இரண்டேதுக்களும் கூடிய கூட்டம், துணிவோனுக்குத் துணிபொருளிற் சங்கயமுண்டாதற்குக் காரணமாகுமென்பதும், துணிவோன் துணிபொருளிற் சங்கயமெய்துதல், அவ்விரண்டேதுக்களுள், திருந்தாத ஏது ஒன்றனையே அனைகாந்திகமாக்குதற்குக் காரணமாம் என்பதும் போதர, 'சாற்றிடுதல், இரண்டினுஞ் சங்கயமாய் ஏகாந்தம(ல்ல)ன்று' என்றார். இது, 'எருதும் கடாவும் பொருது எருது தோற்றது' என்பதுபோல நின்றது.

விருத்தவேது வில்லாதவழி இவ்வேது நல்லேதுவாம். அஃதாமாறு:—

சத்தம் செயலிடைத்தோன்றுவதன்று என்றகொள்கைமேற்கொண்ட சாங்கியரிடையே சொல்லுமிடத்துச் சத்தத்திற் செயலிடைத்தோன்றல் என்னும் விருத்தவேது அவருக்குப் பிரசித்தமில்லாமையால் 'விருத்தவேதுவிற்கும் இடங்கொடுத்தல்' என்னும் குற்றமின்றியே நல்லேதுவாம் என்க.

'அது 'சத்தம் நித்தம், செவிப்புலனாதலால்; யாது செவிப்புலனாவது, அது நித்தம்; சத்தத்தன்மைபோலும்' என அநுமானவுறுப்புக்கள் தடையின்றிமுடிதல் காண்க.

விருத்தவியபிசாரியென்பதற்கு விருத்த ஏதுவாலுண்டாகிய வியபிசாரதோஷத்தையுடையது என்பது பொருள்.

விருத்தஹேதுவாவது: எடுத்துக்கொண்ட ஏதுவினால் துணிதற்குரியபொருளின் மாறுபட்டபொருளை எடுத்துக்கொண்ட ஏதுவின் நிலைக்களத்திற் றுணியவல்லஹேது.

வியபிசாரமாவது: இங்கு ஏதுவைப்பற்றிய தோஷமாதலால் அவ்வேது நிற்கவேண்டியநிலைதவறிநிற்றல்.

ஏதுநிற்கவேண்டியநிலை, 'மொழிந்தபக்கத்து ஊன்றிநிற்றலும், சபக்கத் துண்டாதலும், விபக்கத்தின்றியேவிடுதலும்' என்று முன்பு சொல்லப்பட்டதே.

இந்நிலையேநிற்பதன்றி இதனின் வேறுபடவும் நிற்கும் நிலை வியபிசாரமாகும். அது பிரதிபக்ஷவிருத்தியாயுமிருத்தல்.

பிரதிபக்ஷமாவது: துணிபொருளின் மறுதலைப்பொருள் துணிதற்குரிய ஏதுவிருக்குமிடம்.

இங்கெடுத்துக்கொண்ட செவிப்புலனாதல் என்னும் ஏது, தன்னிலைக்களமாகிய சத்தத்திலிருப்பதுதானே தன்றுணிபொருளின் மறுதலைப்பட்ட அநித்தப்பொருளைத் துணியவல்ல செயலிடைத்தோன்றலென்னும் விருத்தவேதுவிருக்கும் நிலைக்களமாகிய பிரதிபக்ஷத்திலும் இருத்தலாய்முடிதலால் இது வியபிசாரதோஷமாயிற்று.

அசாதாரண வேதுப்போலியுள்ளும், இவ்வாறே வாதிகூறும் ஸ்வபக்ஷவிருத்தியாயிருக்கும் ஏதுவே, எதிரி கூறுமளவில் பிரதிபக்ஷவிருத்தியாயுமிருத்தல் வியபிசாரமாதல் கண்டுகொள்க.

இவ்வியபிசாரதோஷமும் ஏது தான் நிலைதவறிநில்லாது தன்னிலைக்களத்திருக்கச்செய்தே விருத்தவேதுவால் வந்தமையால் விருத்தவியபிசாரம் எனப்பட்டது. இதனையுடைய ஏது விருத்தவியபிசாரியென்று சொல்லத்தகுமென்று தோன்றுகிறது.

இவ்வாறாக மணிமேகலை நூலாசிரியர் கோள்கைக்கு விருத்தவியபிசாரி யென்ற பெயரே பொருத்தமுள்ளதாகத் தோன்றுதலால் நியாயப்பிரவேசத்திலுள்ளபடி விருத்தாவ்யபிசாரி யென்று திருத்திக் கொள்ளவேண்டுமென்று தோன்றவில்லை.

இவ்வகைகாந்திகத்தினிறுதியில் விருத்தவியபிசாரியை வைத்திருப்பது இனிச்சொல்லத்தகும் விருத்தவேதுப்போலிக்குத் தோற்றுவாய்செய்து தொடர்புகாட்டியவாறாயிற்று.

[தொடரும்.]

திரு. நாராயணையங்கார்,

பத்திராசிரியர்.

தமிழிற் சகரமுதற்சொற்கள்.

[நல்லூர், சுவாமி ஞானப்பிரகாசர்.]

"தொல்காப்பியர், சகரத்தை மொழிக்கு முதலாகாது என்று விதந்து விலக்கியிருக்கிறார்......தொல்காப்பியத்துக்கு மாறுபட்ட இவ்வழக்கு, சங்கஇலக்கியங்களிலும் காணப்படுதலால், தொல்காப்பியர் சங்கப்புலவர் பலருக்குக் காலத்தால் முற்பட்டவராயிருத்தல் கூடும்.......தொல்காப்பியர்காலத்தே தமிழ்மொழியிலேயே வழக்கிலில்லாத சகரமுதன்மொழிகள் பிற்கால இலக்கியங்களிலே புகுந்திருக்குமாயின் (அவை) எம்மொழியிலிருந்து வந்திருக்கவேண்டும்? ......பிற்கால இலக்கியங்களிலே புகுந்த சொற்கள் யாவும் வடசொல்லாகவோ திசைச்சொல்லாகவோ இருத்தல்வேண்டும்."

இவ்வளவும் செந்தமிழ் ௨௨-ஆந்தொகுதி 2-ஆம் பகுதியில் வெளிவந்தது.

சகரமுதற்சொற்கள் தமிழிலே ஆதிதொட்டிருந்தனவல்ல என்பது நிச்சயம். தமிழில்மட்டுமல்ல, பிறபாஷைகளிலும் சகரம் பின் எழுந்த ஒரு பேச்சொலியே என்பது மொழிநூல்நிபுணர்களின் கருத்து. சகரவ்ரியின் முதலெழுத்துமாத்திரமல்ல, சகர ஆகாரம் ஆதிய மற்றவைகளும் பின்னரே எழுந்தன. முதல்நாவும் அண்ணமும் உறப் பிறக்கின்ற ககரம் முன்னோக்கி நழுவிநின்று இடைநாவும் இடையண்ணமும் உற ஒலிப்பதே சகரம். அண்ணத்தை நண்ணிய பல் முதன்மருங்கிற் பிறக்கின்ற தகரம் பின்னோக்கி நழுவிநின்று இடைநாவும் இடையண்ணமும் உற ஒலிப்பதும் சகரமேயாம். இதனால் ககரமும் தகரமும் சகரமாவது இயல்பு. வடமொழியிலும் ககரம் சகரத்துக்கு முற்பட்டது. அதிலும் தகரம் ஸகரமாகவரும்.

இனி, தமிழ்க்ககரம் சகரமாய்த் திரிவதற்கு உதாரணம்: கவரி - சவரி; களிம்பு - செளிம்பு; கெய் (கன்னடம்) - செய்; கெம்பு - செம்பு; கிவி (கன்னடம்) செவி; கேடகம் - சேடகம் முதலியன. தகரம் சகரமாவதற்கு உதாரணம்: தப்பை - சப்பை; தேறல் - சேறு; அத்தன் - அச்சன்; மைந்தன் - மஞ்சன் முதலியன.

தொல்காப்பியர்காலத்தில் சகாஆகாரம் முதலியனவற்றைத் தலையிற்கொண்ட சொற்கள் இருந்தன என்பது ஒருதலை. சகாத்தைத் தலையிற்கொண்ட சொற்களும் பரவைவழக்கில் இருந்தனவாகலாம். ஆயினும், அவை இலக்கியங்களிலே ஏறுதனவாயிருந்தமையால், ஆசிரியர் அவற்றை விலக்கினர்போலும். அல்லது சிலசொற்கள்மாத்திரம் ஏறிக்கொண்டமையால், தமிழ்ச்சொல்லாராய்ச்சிநிரம்பாத அக்காலத்தில் இருந்த அவர், அவற்றைத் தமிழன்று, வடமொழி என வைத்தனர்போலும். ஆயின் தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில் "சகரக்கிளவியும் அவற்றோரற்றே; அ, ஐ, ஔவெனும் மூன்றலங்கடையே" எனுஞ் சூத்திரத்துக்கு உரையெழுதிய நச்சினர்க்கினியர், சகரமுதற்சொல்லெல்லாம் வடசொல்லெனக்கருதினரெனத் தோன்றவில்லை. அவர் அவ்வுரையிற் சொல்வது: "உதாரணம்: சாந்து, சிற்றில், சீற்றம், சுரை, சூரல், செக்கு, சேவல், சொல், சோறு என வரும். சட்டி, சகடம், சமழ்ப்பு என்றாற்போல்வன 'கடிசொல்லில்லை' என்பதனாற் கொள்க. சையம், சௌரியம் என்பனவற்றை வடசொல்லென மறுக்க" என்றதினல், சட்டி சகடம் சமழ்ப்பு என்றறற்றொடக்கத்தன தமிழ்ச்சொற்களே எனக் காட்டாமற் காட்டுகின்றார். மேற்கோள்செய்த "கடிசொல்லில்லை காலத்துப் படினே" எனும் சூத்திர உரையிலும் "உதாரணம்: சட்டி, சள்ளை, சமை எனவும், 'சான்றோர் சமழ்த்தனர் நிற்பவே', 'தையலாய் சமழாதுரையென்றதே' எனவும் சகரம் மொழிக்கு முதலாய் வந்தவாறு காண்க. இவை 'சகரக்கிளவி......' என ஆசிரியர் விலக்கலின், அக்காலம் மொழிக்கு முதலாகாது விலக்கிய சகரம், பிற்காலத்து வழங்கியதாயிற்று. ஞெண்டென்பது ஞண்டாய்ப் பின்னர் நண்டென மரீஇயிற்று" என வரைகின்றமையால் இவற்றை வடசொற்கள் என அவர் கருதினரென்று தோன்றவில்லை. இவை முன் வேறுருவங்கொண்டிருந்து, ஞெண்டு நண்டென மருவியவாறு, மருவிவந்திருக்கலாம்: என்பது நச்சினர்க்கினியர்கருத்துப்போலும்.

ஆகவே, "பிற்காலத்தில் இலக்கியங்களிலே புகுந்த சகரமுதற்சொல்லெல்லாம் வடசொல்லாகவோ திசைச்சொல்லாகவோ இருத்தல்வேண்டும்" என்பது பொருத்தமாகத்தோற்றவில்லை. நச்சினர்க்கினியர் எடுத்தோதிய சொற்களுள் சகடம் என்றது, கேடகம் (முதலில் கோடகம்=வளைவானது) எனும் சொல், சேடகம் என

முதனிலைக் ககர ஏகாரம் சகர ஏகாரமாகிநின்றது. பின்னர், சேடக என்பது சேகட என ஒலிநிலைமாற்றினால்(metathesis)வந்து, மேலும் சேகடம் சகடம் என மருவியது; ஆதலால் தமிழ்ச் சொல்லே. ஒலிநிலைமாற்றத்துக்குப் பிற உதாரணங்கள்: விசிறி - சிவிறி; கொடிறு - குறடு; தசை - சதை முதலியன. "கோலுங் குந்தமும் சேடகவட்டமும்" என்றதினாலே (பெருங்கதை. உஞ்சைக். 46, 58.) கேடகத்தினின்று மருவிவந்த சேடகச் சொல்லைக் காண்க. சேகடம் தமிழ் லெக்ஸிகனில் (Tamil Lexicon) காணப் படாவிடினும் சேகண்டி (வட்ட மணிவகை) யில் அதன் வேறொரு உருவத்தைக் காணலாம். எகர ஏகாரங்கள் தமிழில் அகரமாய் வருதலை, செருக்கு - தருக்கு; கேளல் - களிறு ஆதிய உதாரணங் களிற் காண்க. ஆதலால் சேகடமே சகடமாயிற்று எனலாம். வட மொழியில் இதற்கு ஶக் எனும் தாதுவைக் குறித்தல் பொருந் தாது.

சட்டியும், ஒருவேளை வட்டமானது எனும் பொருளுள்ள சகடி (சகடம்) எனுஞ்சொல்லின் திரிபாகலாம்; தப்பை, தட்டு அல்லது தட்டுவம் சட்டுவம் என்ற தமிழ்ச்சொற்களோடு உறவுபூண்டதும் ஆகலாம்; ஆகையால் தமிழ்ச்சொல்லே.

சமழ்ப்பு எனுஞ்சொல் தாழ்தல் என்பதிலிருந்து வந்தது எனச்சொல்லின் கேட்போர்க்கு அதிசயமாய்த் தோன்றும். ஆயினும் அது உண்மையே. தாழ்தல் ஆனது தவழ்தல் தவல்தல், தளர்தல், தளம்புதல், தள்ளுதல் என்று "மடங்கி" வரும். வேறு உதாரணங்கள்:—தோய்-துவை; நேர்-நிகர், நிமிர், நிவ; நீழ்-நெகிழ்; ஏறு - இவர்; வெளி - விளர், மிளிர் ஆதியன. இனி, தவல்தல் தான் தமழ்தல் என வகரம் தன்னினமாகிய மகரமாகியும், அப்பால் முதனிலைத்தகரம் சகரமாகியும் சமழ்தல் ஆயிற்று. சவள் தலையும் நோக்குக. சவள்தலும் சமழ்தலும் அடியர்த்தத்தில் ஒன்றே. மேல்வரும் சவட்டுதல் இச்சவள்தலின் பிறவினையுருவம் என்பது பின்னர்க்காட்டப்படும். வகரம் மகரமாவதற்கு உதாரணம்: விணைக்கெடு - மிணைக்கேடு; சிறுவி - சிறுமி ஆதியன. தகரம் சகரமாதற்கு உதாரணம் முன்னர்த்தரப்பட்டது. ஆதலால் சமழ்தலினின்று வந்த பெயராகிய சமழ்ப்பும் தமிழேயாம். சமழ்ப்பின் அடியர்த்தம் தாழ்வு. தாழ்வினின்றுதான் இழிவு, நாணம்,

வருத்தம் முதலான கருத்துக்கள் "பொருள்வேறுபாட்டுமுறை" யின்படி (semantics) வரும். "தந்தகள்வன் சமழ்ப்பு முகங் காண் மின்" என்ற பரிபாடலிற்கு "அடைந்த கள்வனது தாழ்ந்த (இழிந்த) முகத்தைப் பார்மின்" என்று பொருள் சொல்வது முழுவதும் சரி. ஆயின், க்ஷமா எனும் வடசொல்லிலிருந்து இது பிறந்ததென்றுகொள்ள இடமில்லை. அதுதான் இதில் நின்று மருவிற்றென்றுசொல்லினும் சொல்லலாம். க்ஷம் எனும் தாது வுக்கு இணையான தாதுக்கள் பிற இந்து - ஐரோப்பிய பாஷை களில் இல்லாமையால், அது ஒரு தமிழ் அடியோடு சம்பந்தங் கொண்டதேபோலும். கம்மு - தல் (மூடுதல்) கமழ்தல் (நிறை தல்) எனும் தமிழடிகளையும் ஆராய்க.

நச்சினர்க்கினியர் காட்டிய சமை எனுஞ்சொல் நிரம்புதல் முடி தல் எனும் பொருள்ளுள்ளதெனில், அது முன்சொல்லிய கம்மு தல்வழியாய்ப் பிறந்திருத்தல்கூடும். கம் என்பது நிறைவு; ஆத லால், கமை அதன் வேறொரு உருவமாகலாம். அல்லது அமைத லே பொருளென்றால், அமைதல் எனும் அச்சொல்லே உறுதிப் பாட்டின்பொருட்டுச் சகரமெய்யைத் தலையிற் பெற்றிருக்கலாம். அமைதல் - சமைதல். இதற்குத் தமிழகராதியில் மெய்வருக்கங் களைத் தலையிலே கொண்டுவருகின்ற தனிச்சொற்களெல்லாம் உதா ரணம். தமிழின் பிரதம அடிச்சொற்கள் அனைத்தும் உயிர்களையே தலையிற்கொண்டன. துவிதீய அடிச்சொற்களே மெய் முதலாய் வருவன.

சள்ளை எனுஞ் சொல் சழங்குதல் எனும் அர்த்தமுள்ளதாக லாம், அல்லது சள்ளு எனும் பொருள்கொள்ளலாம். சழங்குதல் ஆயின் இது தளம்புதலோடு இனங்கொண்டது. சள்ளு ஆயின், சள்ளுதல் எனுஞ் சொல் தள்ளுதலின் ஒரு உருவமே. தளம்பு தல் தள்ளுதல் எனும் இவை இரண்டும் தாழ்தலின் "மடக் கல்" உருவங்களென்று முன்னரே கூறினோம். சவட்டுதல் என் பது சவள்தல் எனும் சொல்லின் பிறவினையுருவம்; வளைதல் எனும் பொருளுள்ளது. இது தாழ்தல் தவழ்தல் என்பநனோடு இனங் கொண்டிருத்தல் வெளிப்படை. முன்காட்டிய சமழ்தலும் இது வும் அடியர்த்தத்தில் ஒன்றேயாம். இரண்டும் தாழ்தலில் நின்று "மடங்கி" வந்தன. சவட்டுதலின் அடிப்பொருள் தாழச்செய்தலே.

சவட்டுதலின் அர்த்தங்களது "பொருள்வேறுபாட்டுமுறை" பின் வருவது: 1. மிதித்தல் "தோகைச்செந்நெல்சவட்டி". 2. மொத்துதல். 3. மெல்லுதல் "பஞ்சாய்க்கோரைபல்லிற்சவட்டி"; அதனினின்றும்: விழுங்குதல். 4. அழித்தல் "மூதூர்தன்னையுஞ் சவட்டி"; அதனினின்றும்: கொல்லுதல். 5. வெல்லுதல். இச்சொல் தமிழில் சவள், சவளி, சவலை ஆதிய வேறு இனங்களுமுள்ளதாய் நிற்றலால், இதற்கும் சர்வ் எனும் வடமொழித்தாதுவுக்கும் ஒற்றுமையுண்டென்றெண்ண இடமில்லை.

சண்பகச் சொல்லும் தமிழே எனத் தோன்றுகின்றது. இதன் பழைய உருவம் செம்பகம் எனக் காணப்படும். மலையாளத்தில் இதற்கு, செம்பு + அகம் "சிவப்புநிறம்கொண்டது" என வரலாறு கூறுகின்றார் கண்டேட் எனும் இங்கிலீஷ்—மலையாள அகராதி ஆசிரியர். கெம்பு (உறைத்த நிறம், சிவப்பு) என நின்ற ஆதித் தமிழ்ச்சொல், செம்பு என ஆகி, பின் செம்பகம் ஆயிற்று. செம்பகமே செண்பகமும் சண்பகமுமாயிற்று எனக் கொள்ளலாம். மஞ்சல் நிறமுள்ள பித்தளைப்பாத்திரம் எவ்வண்ணம் செம்பு என்னப்படுகின்றதோ, அவ்வண்ணம் மஞ்சள்பூவுள்ள சண்பகச் செடியும் செம்பகம் எனப்பட்டது. சம்பக எனும் வடசொல்லுக்கு வடமொழித்தாது காட்டுவாரில்லை என்பதுமொன்று. நடத்தல் அசைதல் எனும் பொருளுள்ள 'சம்ப்' எனும் தாது இதற்கு அடியன்று. ஆகவே 'சம்பக' தமிழினின்று பெற்றுக்கொண்ட வடசொல்லே என்க.

சமம் எனும் சொல் சந்தேகத்துக் குரியது. சமர் என்பது அதன் மற்றொரு உருவம். இனி வடமொழி ஸமர எமது அமரினின்று வந்து அந்த ஸமரமே மீண்டு தமிழில் சமர் சமம் என மாறியிருக்கலாமன்றோ. அமல்தல் (அம்முதல்) எனும் உருவமும் உள்ளதாகிய அமர்த்தல் (விரும்புதல், மாறுபடுதல்) எனும் தமிழ்ச்சொல் 'நெருங்கிவரல்' எனும் அடியர்த்தம் கொள்ளும். அமர் எனுஞ் சொல்லே முதனிலை ஸகரப்பேற்றால் ஸமர என வடசொல்லாகியிருக்கலாம்; ஈற்று அகரம், எமது நீர், நீர என வடசொல்லானதிற்போல. ஆயின் வடமொழியாகிய ஸமரத்துக்கு ஸம் + அர, ஸம் + அர்ண=நெருங்கிவரல் என உற்பத்தி கூறுவர். இதுவும் உண்மையாகலாம்.

சலம், சந்தி, சங்கிலி எனும் சொற்கள் சந்தேகத்துக்குரியன. இவற்றிற்கும் தாது தமிழிலேதான் உண்டுபோலும். ஆயின் சொல் வழக்களவில், சங்கிலி எவ்வாறாயினும், சலமும் சந்தியும் வடமொழியேபோலும்.

சகரமுதற்சொற்கள் தற்காலத்தமிழிற் பலவுள. அவையெல்லாம் வடசொல் அல்லது திசைச்சொல் என்று சொல்லிவிட அமையாது. முன் ககரமுதலும் தகரமுதலும் பெற்றிருந்தன, காலகதியில் உருவத்திற் சிறிது திரிபும் பொருளிற் சிறிது வேறுபாடும் கொண்டு, சகரமுதற்சொல்லாயின என்றலே அமையும். அகரமுதல் கொண்டிருந்த சில, வலியுறுத்தலின் பொருட்டு, நேரே, சகரமாகிய மெய் தலையிற்பெற்று, சகரமுதற் சொல்லாயினதும் உண்டு. தமிழிற் சகரமுதற்சொற்களில்லையென்று தொல்காப்பியர் கூறுகின்றமை ஒன்றினால் அவர்காலத்தில் அவை பரவை வழக்கில் இல்லாதிருந்தன என வராது, நூல்களில் ஒருசிறிதும் வழங்கவில்லையெனவும் வராது; ஏனெனில் வழங்கினவற்றை அவர் வடசொற்களென ஒதுக்கிவிட்டிருத்தல்கூடுமன்றோ. தமிழிலக்கியங்களிற் சகரமுதற்சொற்கள் வாரா எனக் கூறினாரன்றி வடமொழியில் அவை இல்லையென்றாரல்லர். ஆகவே தமிழில் சகரமுதற்சொல்லில்லையென ஓர்கட்டளையை வைத்துக்கொண்ட பின் நூல்களுள் வரும் அவ்விதச்சொற்களையெல்லாம் வடசொல்லோ திசைச்சொல்லோ என முடிப்பது இயல்பேயன்றோ. ஆதலால், தொல்காப்பியர் சகரமுற்சொற்களைத் தமிழிற்குரியனவல்ல என ஒதுக்கினார் என்ற ஒரே ஏதுவைக்கொண்டு, அவர், "சங்கநூல்கள்" எனப்படுமவை எழுந்தகாலத்துக்கு முற்பட்டவர் என்று சித்தாந்தஞ்செய்தல் அமையாது.

திருவள்ளுவர்காலம்.

தமிழிலக்கியத்தை வளம்படச்செய்த பண்டைப்புலவர்கள் வரலாற்றினை உறுதியாகக்கூறுதற்கில்லை. பண்டைப்புலவர்கள், பாடல்கள் அல்லது நூல்வாயிலாகத் தம் உள்ளத்துதித்தெழுந்த உணர்வினையும் கருத்தினையும் வெளிப்படுத்தினரேயன்றித் தம் சரிதத்தைக் கூறச் சிறிதும் விழைந்தாரில்லை. மக்கள் உள்ளத்திற்கு உவகையும் ஆறுதலும் அளிப்பது புலவர்கள் இயற்றும் நூல்களேயாயினும், நாவாயினை நல்வழியிற் செலுத்தும் கலங்கரை விளக்கம்போல, மக்களைத் தீநெறிவிலக்கி நன்னெறிப் புகுத்தப் பேருதவியாய்நிற்பது, புலவர்வாழ்க்கையைக் கூறும் சரித்திரமேயாகும். நல்லிசைப்புலமைமிக்கோர் எவரும் பன்னூற்றாண்டுகளாகப் படிப்போருள்ளத்தையள்ளும் உயர்ந்த நூல்களைத் திடீரென்று தொடங்கி முடித்ததாகத் தெரியவில்லை. அந்நூலை ஆக்குதற்குரிய ஆதரவுகளும் அவசியமும் பலகாலும் நிகழ, அந்நூலுக் கின்றியமையாத கருத்துக்கள் நிறைந்திருந்தகாலத்தே, அக்கருத்துக்களைச் சமயம்நேர்ந்தபோதெல்லாம் தம் உலக அநுபவத்துடன் ஈண்டு கண்டு தெளிந்தபிறகே, நூலாகச் சமைத்து வெளியிடும் உண்மை, பலமொழிகளிலும் காணப்படும் புலவர் சரித்திரங்களாலும், புனைந்துரையாகவந்த கர்ணபரம்பரைக்கதைகளாலும், நன்குவிளங்கும். புதியகருத்துக்களைத் தாமே கற்பித்தெழுதுதல் புலவர்தொழிலன்றென்றும், அது தத்துவங்களை ஆராயும் வேதாந்திகள் கடமையென்றும் மேனாட்டாசிரியர் பலர் கூறுகின்றனர். கல்லையும் மண்ணையும் சேர்த்துக் கண்ணைக் கவரும் வனப்புடைய கட்டடத்தையமைக்கும் சிற்பிபோலத் தம் காலத்தே பரந்துகிடக்கும் கருத்துக்களைக் கற்றோர் களிக்குமாறு கட்டுக்கோப்பு மர்மங்களையுணர்ந்து அழகுத்தெய்வத்துக்கிடனாகும் நூலுருவாகத் தொகுப்பதிலேயே நல்லிசைப்புலமையின் ஆற்றல் விளங்குகிறது. எனவே புலவர்கள்வாழ்ந்தகாலத்தை ஆராய்வது, அவர்களியற்றிய பாக்களின் பொருளைத் தெளிவாக

அறிதற்கும் கவியுள்ளத்தையுணர்தற்கும் பேருதவியாகும் என்பதில் ஐயப்பாடில்லை.

பிறநாட்டார்மொழிபெயர்த்துப்போற்றும் நல்லிசைப்புலமை வாய்ந்த திருவள்ளுவர்சரித்திரம், காலம் என்னும் கள்வனால் விழுங்கப்பட்டு அறிய இயலாதிருப்பது தமிழர்செய்த குறையேயாகும். திருவள்ளுவர்சரித்திரத்தைத் தெளிந்து துணிந்துகூறற்கேற்ற ஆதாரங்க ளிலவேனும், தமிழுலகிற் கர்ணபரம்பரையாக வழங்கி வரும் கதைகளும், பிற்காலத்தே தோன்றிய சில நூற்குறிப்புக்களும், ஆராச்சியாளருக்குத் தாங்கள் கொண்ட கருத்தை வெளியிடத் தூண்டுகோலாகவும், ஓரோவழி உதவியாகவுமிருக்கின்றன. ஆனால் வள்ளுவர்காலத்தை யறிவதற்கேற்ற குறிப்பு ஒன்றும் இதுவரை கிடைத்திலது. அவ்வாறிருந்தும் கற்றோர்சிலர் தம் அறிவிற்கேற்பத் தோன்றும் ஊகங்களைக்கொண்டு திருவள்ளுவர் காலத்தை ஏறக்குறைய எடுத்தியம்ப முயன்றிருக்கின்றனர். தாந் தாங்கொண்டகொள்கைகளைப் பிரசங்கவாயிலாகவும் கட்டுரைவாயிலாகவும்வெளியிட்டிருக்கின்றனர். இது சம்பந்தமாகப் பலர்கொண்ட கொள்கைகளைச் சோதித்துச் சிறியேன் கொண்ட கொள்கையை வெளியிட விழைகின்றேன்.

பழந்தமிழ்ப்புலவர்கள் இயற்றிய சங்கப்பனுவல்களில் திருக்குறளின் சொற்றொடர்கள் சுட்டப்படுவதன்றித் திருக்குறளின் கருத்துக்களும் பெரிதும் பாராட்டப்படுவதால் அப்புலவர்கட்குத் திருவள்ளுவர் காலத்தால் முற்பட்டவராதல்வேண்டுமென்று ஒருசாரார் கொள்வர்.

பொதுவாகக் கருத்துக்களைப் புலவர்களும் பெரியோரும் வேறு புலவர்வாயிலாகவன்றித் தம் உலக அநுபவத்தாலும் தம் அறிவுநுட்பத்தாலும் அறிதல்கூடும். பல்லோர் அறிந்த ஒரு கருத்தின் உண்மை, ஒருபுலவனின் சொல்லாற்றலாலும், படிப்போர் உள்ளத்தையள்ளும் கவிதாசக்தியாலும் வலிபெறுதல் இயல்பாம். அதனால் ஏற்ற சான்றுகளின்றிக் கருத்துக்கள் பிறிதொன்றினின்றும் எடுத்தாளப்பட்டனவென முடிவுசெய்தல் இயலாது. முன்னும் பின்னும் அறியாத இருவர் ஓரேகருத்தை வெளியிடக்கூடும்.

ஒன்றினைப்பற்றி ஒரேகொள்கையுடையவராயிருத்தல்கூடும். ஒரோவழி வெளியிடும்பொழுது சொற்களும் சொற்றொடர்களும் ஒன்று போலிருத்தலுங்கூடும். யவனதேயத்தில் தத்துவக்கொள்கைகளையும் அறவொழுக்கங்களையும் பரப்புதற்காக ப்ளேட்டோ, அரிஸ்டாட்டில், சாக்ரட்டீஸ் முதலியோர் ஆக்கிய நூல்களிலும் திருக்குறளின்கருத்துக்கள் காணப்படுவதைத் தமிழும் ஆங்கிலமும் கற்ற பல்லோர் அறிவர். இரண்டிடத்தும் ஒரேபொருளைப்பற்றிப் பேசும் அதிகாரங்களில் ஒரோவழிக் கருத்துக்கள்கூட ஒரேமுறையில் வரிசைப்படுத்தப்பட்டிருக்கின்றன. இதைக்கொண்டும், யவனர்க்கும் பண்டைத்தமிழர்க்கும் வாணிபம் நடந்ததாகக்கூறும் இலக்கியச்சான்றுகளைக்கொண்டும், யவன ஆசிரியர்கள் திருக்குறளை அறிந்து அதன் கருத்துக்களைத் தாமியற்றிய நூல்களிலும் ஏற்றியிருக்கக்கூடும் என எவ்வாறு முடிவுசெய்வது? இரண்டிடத்தும் காணப்படும் இப்பொதுக்கருத்துக்களே, மேற்கூறியதற்கு மாறாக, யவனவாசிரியர்நூல்களைக் கற்றுத் திருவள்ளுவர் தம் நூலை யாத்தார் எனக் கூறவும் இடந்தருமே. காலத்தையறிவதற்கு இத்தகைய சான்றுகளெல்லாம் என்றும் ஏற்ற ஆதாரமாகமாட்டா.

பிற்காலத்தே தோன்றிய கம்பர் திருத்தக்கதேவர் முதலியோர் திருக்குறளின்கருத்துக்களையும் சொற்றொடர்களையும் பொன்னேபோற் போற்றும் முறையை யாரும் மறுக்க இயலாது. உதாரணமாக,

“நல்லா றெனினும் கொளல்தீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று” (222)

என்ற குறளின்கருத்தையும் சொற்றொடர்களையும், கம்பர்,-

“கொள்ளுதல் தீது கொடுப்பது நன்றால்”
(வேள்விப்படலம். 25.)

என்னும் பாடலில் அமைத்திருக்கிறார். குறளைத்தழுவி இவ்வாறு திருத்தக்கதேவர் கம்பர் முதலிய பிற்காலப்புலவர்கள் எழுதிய இடங்கள் பல உண்டு. இம்முறையிற் சங்கநூல்களில் திருக்குறளின்கருத்துக்கள் அமையக் காணோம். இவ்வாறு அமைந்திருந்தாலொழிய ஒன்று மற்றொன்றைத் தழுவியது எனக் கொள்ள இயலாது.

மேலும், திருக்குறளின்பழமையையுணர்த்தும் சிறந்த ஆதாரங்களாக எடுத்துக்கூறப்படும் இரண்டினைமட்டும் ஊன்றிப்பார்ப்போம்.

"எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு" (110)

என்ற குறளையுட்கொண்டு,

"நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம் பாடிற்றே யாயிழை கணவ" (34)

என ஆலத்தூர்கிழார் புறப்பாட்டிலே கூறியதாகவும், 'அறம் பாடிற்றே' என்று பிறர்கூற்றாகக் கூறுதலினாலே 'அறம்' என்பது திருக்குறளையே குறிக்கின்றதென்றும் சிலர் கருதுவர்.

திருவள்ளுவரைப்பற்றியெழுந்த ஆராய்ச்சிநூல்களிலும் இது எடுத்துக்காட்டப்பட்டுளது. 'அறம்' என்பது திருக்குறளையே குறிக்கும் எனக் கருதுவதற்கு என்ன ஆதாரமுளது? உரையாசிரியர் எவரேனும் அவ்வாறு பொருள்கொண்டனரோ? புறப்பாட்டிற்கு உரையியற்றிய ஆசிரியர் எத்தனையோ குறிப்புக்களை எழுதியிருந்தும் இவ்விடத்தில் 'அறம்' என்பது வள்ளுவரியற்றிய குறளைக் குறிக்கும் என எழுதியிருக்கின்றனரோ? திருக்குறளைத் திருவள்ளுவமாலையிற் புலவர்கள் முப்பால் என்ற பெயரால் வழங்குகின்றனரேயன்றி 'அறம்' என்ற சொல்லால் ஒரு புலவரும் வழங்கவில்லையே. வடமொழி ஆகமநூற்கருத்துக்களும் சைமினியியற்றிய வைதிகநூற்கருத்துக்களும் இன்னும் பல்வேறு ஆரியநூற்கருத்துக்களும் பரிபாடல்போன்ற பழந்தமிழ்நூல்களிலே காணப்படுகின்றன. இதனால் பண்டைப்புலவர்கள் ஆரியநூல்களிலே நன்கு பயின்றிருக்கலாம் எனக் கொள்ள இடமிருக்கிறது. அன்றியும், இம்மாதிரியான கருத்துக்கள் அறநூல்களிலே யுள்ளவையென்று கூடவா பண்டைப்புலவர்கள் அறியாமலிருந்திருப்பர்? ஆராய்ச்சித்துறையில் மிக்குப்பயின்ற பல பெரியோர்கள் தற்பொழுது முழுதும் கிடைத்த தமிழிலக்கண நூல்களுள் மிகப் பழமையானதாகக் கருதும் தொல்காப்பியத்தில் மரபியல்முடிவிலே சொல்லப்படும்

முப்பத்திரண்டுதந்திரவுத்திகளும், கௌடில்யர்—அர்த்தசாஸ்திரத்தின்முடிவிலும் அதே தலைப்பெயருடன் காணப்படுகின்றன[1]. ஆரியக் கருத்துக்கள் தமிழிலக்கியத்தில் மிக்குக் கலந்துவந்த காலத்தே எழுதப்பட்ட நூல்களில், எது எதைப்பார்த்துச் செய்யப்பட்டதென முடிவாகக் கூறவியலாதநிலையில், திருவள்ளுவர் குறளைத்தழுவி இதுபோன்ற சங்கநூலடிகள் எழுந்தனவென எவ்வாறுகொள்ளமுடியும்? ஐந்திணைவகுப்பிற்கேற்ப வேட்டுவர், ஆயர், மறவர், உழவர், வலைஞரென்ற மேன்மக்களும், பாணர், பறையர், துடியர், கடம்பர் என்ற கீழ்மக்களும்[2] தவிர வேறு பிரிவில்லாத மிகப்பழைய தமிழர்சமுதாயத்தில் ஏனையமக்களெல்லோரையும் விட்டுப் 'பார்ப்பாரைப்பிழைத்தல்தான் கொடிய பாதகம்' என்ற கொள்கை ஆரியர்வழியாகவன்றித் தமிழர்க்கு வேறு எவ்வழியாகவந்திருக்கும்? பார்ப்பார்வதையை நாவாலும் நவிலுதலாகாதென, ஆலத்தூர்கிழார் 'பிழைத்த' என்ற சொல்லால் மறைத்துக்கூறும்படி[3] தமிழருக்குப் பார்ப்பாரிடத்திற் பெருமதிப்பும் பக்தியும் ஆரியர்கூட்டுறவாலும் நூலுணர்வாலுமின்றி வேறு எதனால் வந்தது? 'உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்ற குறளடியிலும், 'செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென' என்ற புறப்பாட்டடியிலும் சொல்லும் பொருளும் ஒத்திருத்தலை யாரும் மறுக்கவில்லை. ஆயினும், திருவள்ளுவர் சங்கநூற்புலவர்களுக்கு முற்பட்டவர் என்பதை வேறு ஆதாரங்களால் நிரூபிக்குமுன்னர், குறட்கருத்தையுட்கொண்டு ஆலத்தூர்கிழார் பாடினரெனக்கொண்டு அதுவே சான்றாகத் திருவள்ளுவர்காலத்தை வரையறுத்தல் ஆதாரமற்ற ஆராய்ச்சியாகும். ஆன்முலையறுத்தல், மகளிர்கருச்சிதைத்தல், பார்ப்பாரைக்கொல்லுதல் முதலியவைகளைத் தொகுத்துத் தீராப்பாதகங்களாக ஆலத்தூர்கிழார் கூறுவதை

---

[1] இதைத் திருவாளர். மு. இராகவையங்காரவர்கள் தம் நண்பரொருவர் கூறியதாகப் பொருளதிகார ஆராய்ச்சியில் எடுத்துக்காட்டியுள்ளார்கள்.

[2] "துடியன் பாணன் பறையன் கடம்பனென்
றிந்நான் கல்லது குடியு மில்லை" (புறம். 335.)

[3] இக்குறிப்பை, புறம் 34-ன் உரையிற் காண்க.

உற்றுநோக்கின், அவர் திருக்குறளொழிந்த வேறு நூல்கள் வாயிலாக அவைகளை அறிந்திருத்தல்கூடுமென ஊகிக்க இடமுண்டு. அவைகளையுள்ளடக்கிப் பொதுவாக 'எந்நன்றி' என்ற தொடரால் உய்வு, செய்தி, கொல்லல் முதலிய புறப்பாட்டின் சொற்களையே அமைத்துத் திருவள்ளுவர் தம் குறளை அமைத்திருத்தலுங் கூடும். 'எந்நன்றி' என்றவிடத்துத் திருவள்ளுவர், புறப்பாட்டின்கருத்தையே உட்கொண்டு சுருங்கச்சொல்லல் என்னும் உத்தியால் இவ்வாறுகூறினார் எனத் தான் கருதுவதுபோன்று பரிமேலழகர் விசேடவுரையில் இப்புறப்பாட்டிற்சொல்லப்படும் பெரிய அறங்களின் சிதைவினை யெடுத்துக்காட்டுகின்றார்.

பின்னும்,

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை" (55)

என்ற குறளாசிரியரையே, சாத்தனார், மணிமேகலையில்,

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேராய்" (22; 59—61.)

என்ற அடிகளாற் சுட்டுகிறார் எனவும் சிலர் கருதுவர்.

பொய்யில்புலவன் என்பது திருவள்ளுவரையே சுட்டுவதாகக் கொள்ளினும், மணிமேகலையைச் சங்ககாலத்திலே செய்யப்பட்ட நூலாக யார் முடிவுசெய்திருக்கின்றனர்? சிலப்பதிகாரத்தோடு மணிமேகலையும் கடைச்சங்கமுடிவில் இளங்கோவின் சமகாலத்தவரான சாத்தனாரால் இயற்றப்பட்டதென்ற கொள்கை எல்லோர்க்கும் ஏற்புடைத்தன்று. சரித்திரவாராய்ச்சி செய்த பலரும், மகாமகோபாத்தியாய டாக்டர் சாமிநாதையரவர்களும், பண்டிதர் இராகவையங்கார்ஸ்வாமி அவர்களும் மணிமேகலையிற் காணப்படும் [1]"குச்சரக்குடிகை" என்ற சொற்றொடரைக்கொண்டு சங்கமே ஐந்தாவது நூற்றாண்டிலிருந்ததாகக் கருதுகின்றனரே. அப்படியிருக்க இவ்வாதாரம் திருக்குறளின்பழமையை எவ்வா

1. மணிமேகலை 18; 145, 153.

றுணர்த்தும். மேலும், 'பொய்யில்புலவன்' என்பது திருவள்ளுவரையே குறிக்கும் எனத் துணிந்துகூறப் பழைய இலக்கியங்களில் என்ன சான்றுகள் உள? திருவள்ளுவமாலையிற் சங்கப்புலவராகிய வெள்ளிவீதியார் செய்ததாகக்கருதப்படும் பாடலில்,—

"செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே" (23)

என்ற இடத்துத் திறக்குறள் பொய்யாமொழியாகச் சுட்டப்படுகிறது. தேனீக்குடிக்கீரனுர் என்னும் சங்கப்புலவர் இயற்றியதாகக் கருதப்படும்,—

"பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் யல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே" - (49)

என்னும் பாடலிலும் இக்கருத்துப் பின்னும் வருகிறது. இதைக் கொண்டு அவர்கள் 'பொய்யில்புலவன்' என்பது திருவள்ளுவரையே சுட்டும் எனக் கொண்டனர்போலும். ஆனுல் இதில் எங்கும் திருவள்ளுவரைப் 'பொய்யில்புலவன்' என்று சுட்டவில்லையே. திருவள்ளுவமாலை கடைச்சங்ககாலத்தே சங்கப்புலவர்களால் ஒரேசமயத்திற் பாடப்பட்டதென்ற கதையைத் தற்பொழுது யாரால் நம்பமுடியும்? அதிலுள்ள பாடல்களை இயற்றியவராகக் கருதப்படும் சங்கப்புலவர்கள் புறப்பாட்டு முதலியவைகளில் முன்னிலையாக விளித்துக்கூறிய அரசர் வள்ளல் இவர்களின் காலத்தை நோக்கும்போது, திருவள்ளுவமாலையியற்றிய புலவர்கள் சமகாலத்தவராயிருக்கமுடியாதென்பது நன்குவிளங்கும். அன்றியும் திருவள்ளுவமாலை இடைச்சங்கத்திலேயிருந்தவர்காளகக் கருதப்படும் புலவர்களும் பாடியதாகத் தெரிவிக்கின்றமையின், திருவள்ளுவமாலை பிற்காலத்தவரால் இயற்றப்பட்டதென்பதும், அது சரித்திர உண்மையன்றென்பதும், எந்தக்கொள்கையை நிலைநிறுத்தவும் அதிற் கூறியவைகள் ஏற்ற ஆதாரங்களாகாவென்பதும் வெள்ளிடைமலைபோல் விளங்கும்.

"பொய்யடிமையில்லாப் புலவர்" என்று சமயகுரவருள் ஒருவர் கூறியது சங்கப்புலவர்களையே குறிக்கும் என்று ஒருசாரார்

கருதுகின்றனர். அது உண்மையாயின் சாத்தனார்கூறிய "பொய்யில்புலவன்" என்ற தொடரும் திருவள்ளுவரல்லாத வேறு சங்கப் புலவரை என் குறிக்கக்கூடாது? அவ்வாறு குறிப்பின் அப்புலவர் இக்கருத்தை எந்நூலில் எச்செய்யுளிற் கூறியுள்ளார்? என வினவலாம். ஆயின் சங்கத்தார்பாடியவைகளெல்லாம் நமக்குத் தற்பொழுது கிடைத்திருக்கின்றனவா? எத்துணையோ செய்யுள்களும் நூல்களும் அழிந்துபட்டன என்பதற்கும் முதல் இடைச் சங்கங்கள் நடந்த இடங்கள் கடல்கொள்ளப்பட்டன வென்பதற்கும் போதிய இலக்கியச்சான்றுகள் இன்றும் உளவே. அடியார்க்குநல்லார்காலத்திருந்த பல இசை நூல்களும் நாட்டிய நூல்களுமே நமக்கு இப்பொழுது கிடைக்கவில்லையே. அதுபோலவே சங்கப்புலவர் இக்கருத்துக்கொண்டு பாடிய பாடலும் அழிந்துபோயிருத்தல்கூடும். இதனால் சங்க இலக்கியத்தில் வீசும் குறள் மணத்தையோ, குறளில் வீசும் சங்கநூல்வாடையையோகொண்டு திருவள்ளுவர் காலத்தால் முற்பட்டவர் பிற்பட்டவர் என்று கூறுதற்கில்லை.

[தொடரும்.]

ஆர். நரசிம்ஹன், B.A. (Hons.,
தலைமைத்தமிழாசிரியர்,
நாஷனல்ஹைஸ்கூல்,
ரிஷிவேலி P. O
சித்தூர்ஜில்லா.